Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12
விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 238

சனிக்கிழமை 22 ஜூலை 2023

ஆடி 06 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

13ஆம் திருத்தம் நடைமுறை

மாகாணசபைத் தேர்தல்

தமிழர் அபிலாஷை நிறைவேற்றம்

## பழைய பல்லவியையே ரணிலிடம் பாடிய மோடி!

### அதிகாரப் பகிர்வு விடயம் கூட்டறிக்கையிலுமில்லை

புதுடில்லி, ஜூலை 22
இலங்கை ஆட்சியாளர்களிடம் இந்தியா வழமையாக வலியுறுத்தி வரும் விடயங்களையே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று வலியுறுத்தியுள்ளார். 'இலங்கையில் புனரமைப்பு மற்றும் நல்லிணக்கம் பற்றிய பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டுள்ளன. »11

## இலங்கையும் இந்தியாவும் நிலரீதியாக இணைப்பு!

### சாத்திய ஆய்வு விரைவில் ஆரம்பம்
### கூட்டறிக்கையில் தெரிவிப்பு

புதுடில்லி, ஜூலை 22
இலங்கை மற்றும் இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி மற்றும் செழுமையை ஊக்குவிப்பதற்காக திருகோணமலை மற்றும் கொழும்பு துறைமுகங்களுக்கான தரை மார்க்கமான பிரவேசத்தை விரிவாக்கும் வகையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நிலத் தொடர்பை உருவாக்குதல் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான பல்லாயிரம் ஆண்டுகால உறவை மேலும் அபிவிருத்தி செய்தல். இவ்வாறான தொடர்பை உருவாக்குவது குறித்ததான ஆய்வு வெகு விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று இந்திய - இலங்கை கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

## 13 'மைனஸ்' யோசனையை மோடிக்குத் தெரியப்படுத்தினேன்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

புதுடில்லி, ஜூலை 22
பொலிஸ் அதிகாரம் இல்லாது 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பில் முன்வைத்த ஆவணம் தொடர்பில் இந்தியப் »11



## கறுப்பு ஜூலை நினைவேந்தல்

யாழ்., ஜூலை 22
கறுப்பு ஜூலை 40 ஆவது ஆண்டு இனப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 »11

## 2024 இல் 25 விடுமுறை நாள்கள்

கொழும்பு, ஜூலை 22
அடுத்த ஆண்டுக்கான அரச மற்றும் வங்கி விடுமுறைகள் குறித்த விவரங் »09

## இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

யாழ்ப்பாணம், ஜூலை 22
இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 15 இந்திய மீனவர்களுக்கும் 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைத்த 18 மாதச் சிறைத் »11

விஸ்வரூபமெடுக்கும் 'இடியன்கள்'

## நெடுங்கேணியில் நேற்றும் ஒருவர் சுட்டுக்கொலை

வவுனியா, ஜூலை 22
நெடுங்கேணி, பட்டிக்குடியிருப்புக் கிராமத்தில் நேற்றுமாலை ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அழகையா மகேஸ்வரன் »09

## யாழில் கடும் வறட்சி; நீர் விநியோகம் குறைப்பு

### நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22
பருத்தித்துறை நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நீர் பெறப்படும் நிலையங்களில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி »11

## கூட்டறிக்கை சொல்லும் திட்டங்கள்

- மன்னார் - இராமேஸ்வரம், கே.கே.எஸ். - நாகபட்டினம் படகுச் சேவை விரைவில் ஆரம்பம்.
- காங்கேசன், கொழும்பு, திருகோணமலை துறைமுகங்கள் அபிவிருத்தி.
- சென்னை - யாழ்., திருகோணமலை, மட்டக்களப்பு வரை விமான சேவை.
- பலாலி விமான நிலைய உட்கட்டமைப்பு அபிவிருத்தி.
- தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு குழாய் மூலம் பெற்றோல்.
- திருகோணமலை வலுசக்தி மையமாக மாற்றம்.
- சம்பூரில் சூரியமின்கலத் திட்டம்.
- இலங்கையின் பெற்றோலிய வளத்துறையை அபிவிருத்தி செய்ய இலங்கை கடற்கரையோரத்தில் கூட்டு அகழ்வு, ஹைட்ரோகார்பன் உற்பத்தி.

## 63 மருந்துகள் தரமற்றவை பரிசோதனையில் உறுதி

கொழும்பு, ஜூலை 22
சுகாதார அமைச்சின் இந்த வருடத்தின் மருந்துத் தரப்பரிசோதனையில் 63 மருந்துகள் »09

நல்லூர்ப் பெருந்திருவிழா ஏற்பாடுகள் அறிவிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரிவினையை ஏற்படுத்த முனைந்து

# உறங்கும் தெற்கு இளைஞர்களை மீண்டும் எழுப்ப முயற்சிக்காதீர்!

### சுரேன் ராகவன் நாடாளுமன்றில் பேச்சு

**கொழும்பு, ஜூலை 22**

**தமிழ்த் தேசியவாதிகள் அதிகாரப் பகிர்வைக்கோரி நாட்டில் பிரிவினை வாதத்தை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டாம். ஒரு போதும் அதிகாரப்பகிர்வு கிடைக்கப்போவதில்லை. உறங்கிக் கொண்டிருக்கும் தெற்கு இளைஞர்களை மீண்டும் எழுப்ப வேண்டாம் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான சுரேன் ராகவன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் அரசியல்வாதிகளுடன் அதிகாரப் பகிர்வு தொடர்பில் நான்கு சுற்றுப் பேச்சுகளில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார். இந்தப் பேச்சுகளில் ஈடுபட்ட தமிழ்த் தேசியவாதிகள் வெளியில் சென்று இது அவசியமில்லை. அதிகாரப்பகிர்வு இன்றி இதனை முடிக்கப் போவதில்லை என்று கூறுகின்றனர். கனவு காண வேண்டாம் என்று நான் அவர்களிடம் கேட்கின்றேன்.

அதிகாரப் பகிர்வுகோரி வட்டுக்கோட்டை வரை சென்று மீண்டும் 2009 வரை இந்த நாட்டு இளைஞர்களை இரத்தக் களரிக்குள் கொண்டு சென்றனர். மீண்டும் யுத்தத்தையா கேட்கின்றீர்கள்.

சம்பந்தன் சரத்பொன்சேகாவுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் சிங்கக்கொடியை அசைத்து பிரிக்கப்படாத நாட்டுக்குள் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் தீர்வுக்குள் போவோம் என்று அன்று உறுதியளித்தார்.


அப்படியென்றால் எப்படி இன்று எவ்வாறு அதிகாரப்பகிர்வைத் தவிர நாங்கள் எதையும் ஏற்கமாட்டோம் என்று கோருகின்றீர்கள்.

உறங்கிக்கொண்டிருக்கும் தெற்கு இளைஞர்களை மீண்டும் எழுப்ப முயற்சிக்க வேண்டாம். எங்களுக்கு சர்வதேசத்தை மகிழ்விக்கவும், அமெரிக்க, இந்தியத் தூதுவர்களை மகிழ்விக்கவும் தெரியும்.

ஆனால் அதுவல்ல நடக்க வேண்டியது. அனைத்து இனங்களின் உரிமைகளுக்காகவும் பொதுவில் ஜனநாயகத்தை ஏற்றுக்கொள்வோம்.

பயணத்தை ஆரம்பிக்க முன்னரே பிரிவினை வாதம், அதிகாரப் பகிர்வு தொடர்பில் கூறினால் அதற்கு எங்களால் இடமளிக்கமுடியாது.

வடக்கு மக்கள் இதற்கு இடமளிக்கப் போவதில்லை. அடுத்த தேர்தலில் தோல்வியடையும் தமிழ்த் தேசியவாதிகள் முன்னெடுக்கும் இந்தச் செயற்பாடுகளுக்கு நாங்கள் எதிர்ப்பு - என்றார். (ம)



இலங்கை முதலீடு தொடர்பில்

# அதானி - ரணில் நேற்றுச் சந்திப்பு!

கொழும்பு, ஜூலை 22

இந்தியாவின் அதானி குழும உரிமையாளர் கௌதம் அதானியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தியாவுக்கு இரண்டு நாள் பயணமாகச் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு பல்வேறு தரப்பினருடனும் சந்திப்புக்களில் ஈடுபட்டு வருகின்றார். அதன் தொடர்ச்சியாகவே அதானியையும் அவர் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

குறித்த சந்திப்பில், கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனைய நிர்மாணம், 500 மெகாவாட் காற்றாலை மின் திட்டம் மற்றும் பசுமை வலுச்சக்தி உற்பத்தியை புதுப்பித்தல், விரிவுபடுத்துதல் உட்பட இலங்கையில் மேற்கொள்ளும் திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளதாக கௌதம் அதானி தனது ருவிற்றரில் தெரிவித்துள்ளார். (ம)

# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்: வாங்க எவரும் இல்லை!

கொழும்பு, ஜூலை 22

பெரும் நட்டத்தில் இயங்கி வரும் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தைத் தனியார் மயப்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ள போதிலும் அதை வாங்குவதற்கு எவரும் முன்வரவில்லை என்று அறியமுடிகின்றது.

இதன் 49 வீத பங்குகளை அரசு வைத்துக் கொண்டு 51 வீத பங்குகளைத் தனியார் நிறுவனத்திடம் வழங்கும் திட்டம் உள்ளது.

ஆனால், அதை வாங்குவதற்கு எந்தவொரு நிறுவனமும் இதுவரை முன்வரவில்லை. (ம-22)

# கறுப்புப் பணத்தை மீட்பதற்கு முயற்சி


கொழும்பு, ஜூலை 22

இலங்கையில் தவறான வழியில் சம்பாதித்து அல்லது திருடி வெளிநாடுகளில் பதுக்கி வைத்திருக்கும் இலங்கையர்களின் கறுப்புப் பணத்தைக் கைப்பற்றுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் மற்றும் வர்த்தகர்கள் ஆகியோரால் தவறான வழியில் சம்பாதிக்கப்பட்ட ஒரு பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான பணம் மற்றும் சொத்துக்கள் வெளிநாடுகளில் இருக்கின்றன என்றும், அவற்றை மீண்டும் நாட்டுக்குக் கொண்டுவந்து அரசுடைமையாக்குவதற்காகப் புதிய சட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கும் அரசு முடிவெடுத்துள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. போதைப் பொருள் வர்த்தகம் மூலம் சம்பாதிக்கப்பட்ட அதிகமான சொத்துகள் டுபாய் உள்ளிட்ட நாடுகளில் உள்ளன என்றும், அவற்றைப் புதிய சட்டம் மூலம் இலங்கைக்குக் கொண்டுவர முடியும் என்றும் அரச தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (ம-22)

# இலங்கையின் சுகாதார நெருக்கடி தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத்துக்கு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 22



இலங்கையில் இப்போதுள்ள சுகாதாரப் பேரிடர் மற்றும் மருத்துவ நெருக்கடி தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைப் பிரதிநிதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இடையில் நேற்றுமுன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பின்போதே மேற்படி விடயங்கள் தொடர்பில் சஜித்தால் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப் பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள மருந்துப் பொருள்களுக்கான தட்டுப்பாடு, தரம் குறைந்த பதிவு செய்யப்படாத மற்றும் அதிக விலைக்கு நாட்டுக்குக் கொண்டுவந்த மருந்துகளால் அப்பாவி நோயாளிகள் உயிரிழந்துள்ளமை, அரச மருத்துவமனைகளில் மருத்துவ இயந்திரங்களின் தட்டுப்பாடு மற்றும் பராமரிப்பின்றி குறித்த இயந்திரங்களைப் பயன்படுத்துதல், மருத்துவர்கள், சுகாதார அதிகாரிகள் நாட்டை விட்டு வெளியேறுவது போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. (ம)

# ஆட்சியைப் பிடிக்காமல் ஜே.வி.பி. ஓயாது!

கொழும்பு, ஜூலை 22

ஆட்சியை நாம் பிடிக்கும் வரை போராட்டம் தொடரும் என்று ஜே.வி.பி.யின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'மக்களின் பொருளாதாரப் பிரச்சினைக்கு இதுவரை தீர்வு வழங்கப்படவில்லை. அதிகாரம் உள்ள வர்க்கம் அதிகாரம் அற்ற வர்க்கத்தை நிர்வகித்துக்கொண்டு செல்கின்றது. அந்த மக்களின் பிரச்சினை தீரவேண்டுமென்றால் ஆட்சியைக் கைப்பற்றவேண்டும். அந்த ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகப் பல வழிகளில் நாம் போராடுகின்றோம். ஆட்சியைப் பிடிக்கும் வரை போராடுவோம் - என்றார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டியைக் கோருவதை அனுமதிக்கவே முடியாது!

## வீரசேகர விஷமத்தனம்



**கொழும்பு, ஜூலை 22**

**அதிகாரப் பகிர்வு என்ற நோக்கத்துடன் ஜனாதிபதியைச் சந்தித்து இல்லாத பிரச்சினையைத் தோற்றுவிப்பதை தமிழ் அரசியல்வாதிகள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கத்துக்காக நாட்டைப் பிளவுபடுத்த ஒரு போதும் அனுமதிக்கப்போவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவை முறையாக செயற்படுத்தப்பட்டுள்ள பின்னணியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகள் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவும், அதிகாரப் பகிர்வு கோரியும் பேச்சில் ஈடுபடுகிறார்கள். வீடு பற்றி எரியும்போது சிகரெட் பற்ற வைப்பதற்கு அந்த வீட்டில் இருந்து தீ எடுப்பதைப் போல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்படுகிறார்கள். காணி விவகாரத்தில் ஒரு மாகாணத்துக்கு மாத்திரம் விசேட சலுகை வழங்க முடியாது. வழங்கவேண்டுமாயின் சகல மாகாணங்களுக்கும் அந்த அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை இந்தியா பலவந்தமான முறையில் அறிமுகப்படுத்தியது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் தற்போது வலுவற்றுள்ளது. ஏனெனில் இந்தியா பல நிபந்தனைகளை அமுல்படுத்தவில்லை.

தமிழ் அரசியல்வாதிகள் பொய்யுரைப்பதற்கு அச்சமடைந்தில்லை, சிங்கள அரசியல்வாதிகள் உண்மையைக் கூறுவதற்கு அச்சமடைந்தார்கள். இதுவே இன்றைய பிரச்சினைக்கு மூல காரணியாக உள்ளது. ஆகவே தமிழ் அரசியல்வாதிகளின் பொய்யை சர்வதேசம் தமது பூகோள அரசியலுக்காக ஏற்றுக்கொண்டது.

இலங்கை ஒற்றையாட்சி நாடு. ஆகவே இலங்கையில் சமஷ்டியாட்சி முறைமையிலான கட்டமைப்பைத் தோற்றுவிக்குமாறு தமிழ்த் தரப்பினர் குறிப்பிடுவது நகைப்புக்குரியது. எக்காரணிகளுக்காகவும் அதிகாரப் பகிர்வுக்கு நாங்கள் இடமளிக்க மாட்டோம் -என்றார். (ம)

# பொலிஸார் முறைப்பாட்டை ஏற்காதுவிடின் நடவடிக்கை!

## வவு. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 22

பொதுமக்களின் முறைப்பாடுகளை ஏற்க பொலிஸார் மறுத்தால் உடன் அறியத்தாருங்கள் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடகவியலாளர்களுக்கும் சிரேஷ்ட அத்தியட்சகருக்குமிடையே வவுனியாவின் தற்போதைய நிலைமைகள் தொடர்பிலான விசேட கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். வவுனியாவில் சில பொலிஸ் நிலையங்களில் பொதுமக்களின் பல முறைப்பாடுகளைப் பொலிஸார் ஏற்க மறுப்பதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவ்வாறு செயற்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்கள் 0718591340 என்ற அலைபேசி இலக்கத்துக்கு இதுதொடர்பில் முறையிடலாம் என்று வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார். (ச-18)

# சிறுவன் துஷ்பிரயோகம்: அரச அலுவலர் கைது!

வவுனியா, ஜூலை 22

15 வயதுச் சிறுவன் ஒருவனை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் 33 வயதான அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியா பொலிஸ் நிலையத்தில் சமூக பொலிஸ் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் குறித்த நபர் பாடசாலை நிகழ்வுகளில் மொழிபெயர்ப்பாளராகச் செயற்படுகின்றார். குறித்த அலுவலர் வவுனியாவிலுள்ள பாடசாலையொன்றில் கல்விபயிலும் 15 வயதான சிறுவனை துஷ்பிரயோகம் செய்தோரென கிடைத்த முறைப்பாட்டுக்கமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட சிறுவன் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (ச-18)

## மாணவர்களின் போஷாக்கு:

# கொடுப்பனவுகளுக்கு நிதி அளிக்கவில்லை

கொழும்பு, ஜூலை 22

மாணவர்களுக்கு ஒருவேளை உணவை வழங்கும் போஷாக்கு வேலைத்திட்டத்துக்கு பல மாத காலமாக கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்று உணவு விநியோகஸ்தர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

அவர்களுக்கான கொடுப்பனவு வலயக் கல்விக் காரியாலயங்கள் ஊடாக வழங்கப்படவேண்டும். எனினும் தமக்கு நிதி கிடைக்காமையால்தான் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்றும், நிதி கிடைக்கப்பெற்றவுடன் அந்த நிலுவைக் கொடுப்பனவுகளைச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வலயக்கல்வி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)




கூரையில ஏறி இன்னமும் கோழியே பிடிக்கேலை அதுக்குள்ள வானத்தில ஏறி வைகுண்டம்போக ஆசைப்பட்டால் அது நடக்குமோ? அப்பிடித்தான் இருக்கு இந்தியாவும் இலங்கையும் நேற்று அறிவிச்ச திட்டங்கள். காரைக்காலுக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில கப்பலோ, படகோ ஓடுமெண்டு அறிவிச்சு மாதக்கணக்காப் போட்டுது. ஆனால் ஒரு துரும்பு கூட அசையேலை. இந்த மாசம் ஓடுது, அடுத்த மாசம் ஓடுது எண்டு இல்லாத கப்பலை வாயால ஓட வைச்சதுதான் மிச்சம். முதல்ல இலங்கை அனுமதிதரேலை எண்டிச்சினம், இப்ப என்னடாவெண்டால் இந்தியாவில எந்தத் துறைமுகத்தில இருந்து கப்பலை விடுகிறது எண்டதில முடிவெடுக்க ஏலாமல் இருக்காம். இந்த அடிப்படை விசயத்தைக்கூட முடிவு செய்யாமலோ, கப்பல் ஓடப்போகுது எண்டு கதை விட்டவை. இலங்கைக்கு போனமாம், ஏதாவது கதையை அடிச்சு விட்டமாம் எண்டுதான் எல்லாரும் இருக்கினம் போல.

அதைமாதிரி பலாலி எயார்போர்ட்டை திறந்தால், பிளேன் பிளேனா வந்து இறங்கும், யாழ்ப்பாணம் கட்டுநாயக்கவை விட உழைக்கும் எண்டெல்லாம் கனக்க கனவுகள் சொல்லுப்பட்டுது. ஆனால் இந்தியாவில இருந்துமட்டும்தான் பிளேன் வந்தது. வேற நாட்டுப் பிளேன் ஒண்டும் எட்டியும் பாக்கேலை. கேட்டால் 'ரன்வே' நீளம் காணாதாம். பலாலியைத் திரும்பத் திறக்கேக்கையே உதுகளையெல்லாம் ஒழுங்காச் செய்து முடிச்சுப்போட்டுத் திறந்திருக்கலாமே. தெட்டம் தெட்டமாத் திறக்கிறதால நட்டம் தானே தவிர நயமில்லை. உதுக்கும் 'இலங்கை அரசாங்கம் ரன்வேயைக் கூட்ட விரும்புகுதில்லை' எண்டு ஒரு சாட்டு. இப்ப ரன்வேயைக் கூட்டுறதுக்கு, விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமாலே நேரில வந்து ஓமெண்டிட்டு போட்டார். அதுக்குப் பிறகும் ரன்வே வேலையள் தொடங்கின சிலமனைக் காணேலை. காங்கேசன்துறைக்கு காரைக்காலில இருந்து கப்பல் ஓடின கதைமாதிரித்தான் பலாலி ரன்வே விசயமும் ஒரு முடிவில்லாமல் இழுபடப் போகுது எண்டது பட்சிக்கு நல்லாவே தெரியும்.

ஆனால் இதுவே ஒரு விகாரையைக் களவாக் கட்டவேணும் எண்டா அது கண்மூடித் திறக்கிறதுக்குள்ள கட்டுப்பட்டு முடிஞ்சிடும். விகாரையைக் கட்டினால் ஏதோ புத்தர் வந்து டொலர்மழை பொழிஞ்சிடுவார் எண்டு நம்புகினமோ தெரியேலை. ஆனால் இந்தியாவுக்கு கப்பலையும், பலாலிக்கு சர்வதேச விமானங்களையும் ஓட விட்டாலே இலங்கைக்கு இன்னும் லாபம்தான் கூடும். மழையாப் பொழியாட்டியும் சின்னத்தூறல் மாதிரியாவது டொலரும், சாமான்களும் நாட்டுக்க வரும். நிலைமை இப்பிடியிருக்க ஏதோ அனுமன் அறிக்கைவிட்ட மாதிரி இலங்கையையும் இந்தியாவையும் நிலத்தால இணைக்கப்போறம் எண்டு இந்தியாவும் இலங்கையும் கூட்டாச் சொல்லியிருக்கினம். முதல்ல உந்தக் கப்பலையாவது ஓடப்பண்ணுங்கோ. நிலம் போடுற வேலையை பிறகு பாக்கலாம்.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுக்கோட்டையில் உணவுத் திருவிழா





யாழ்ப்பாணம், ஜுலை 22
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின்200ஆவது ஆண்டை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை பாரம்பரிய உணவுத்திரு விழா இடம்பெற்றது.
பாரம்பரிய உணவுகளை அடுத்த சந்ததிக்கு கடத்தும் விதமாக சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாரம்பரிய உணவு உற் பத்தியாளர்கள் மூலம் குறித்த பாரம்பரிய உணவுத்திருவிழா முன்னெடுக்கப்பட்டது. (ம-125)

# கிளி. விவேகானந்தா வித்திக்கு உலக வங்கி ஆலோசகர்கள்!



கிளிநொச்சி, ஜுலை 22
உலக வங்கியின் நிபுணத்துவ ஆலோசகர்கள் கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலத்துக்கு கடந்த புதன்கிழமை களப்பயணம் மேற்கொண்டனர்.
அங்கு உலக வங்கியின் செயற்றிட்டம் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டனர். வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (ச-ரி3-214)

# அன்னை அவதரித்த ஆடிப்பூரம்



நா. ஸ்ரீகிருஷ்ணா

இன்று ஆடிப்பூரம். சக்தியின்றிச் சிவனில்லை என்பர். அந்தச் சக்தி அவதாரம் செய்த தினம் ஆடி மாதத்தில் வரும் பூர நட்சத்திரம் எனப் புராணங்கள் கூறுகின்றன. இதனால் இந்தத் தினம் 'ஆடிப்பூரம்' என அழைக்கப்பட்டுச் சக்தி வழிபாடு நடத்தப்படுகிறது.
அண்டவெளியில் அளவற்ற கோள்கள் உலவுகின்றன. அவற்றை அளவிடும் திறமை மனிதனுக்கு இல்லை. கற்றது கைமண்ணளவு என ஔவையார் கூறியதுபோல, நாம் எமது கண்களால் காண்பவை ஒரு சிறு துகளுக்கு ஒப்பானவையே. இவற்றையெல்லாம் ஏதோவொன்று (அதாவது எமது அறிவுக்குப் புலப்படாத ஒன்று) இயக்குகிறது. நாளை நடப்பதை யாரறிவார்? சாதாரணமாக நாம் கூறும் வார்த்தை இது. நாம் நினைப்பது எதுவுமே நடப்பதில்லை. ஒன்று நினைக்க வேறொன்று நடந்து முடிந்துவிடுகிறது. நாம் நினைத்தது நினைத்தபடி நடந்தேறிவிட்டால் எமது கெட்டிக்காரத்தனம் என எம்மை நாமே புகழ்ந்து கொள்கிறோம். எதிர்பாராதது நடந்துவிட்டால் அதுவிதி என்று கூறிவிடுகிறோம்.
இதனை யோகர் சுவாமிகள், 'எப்பவோ முடிந்த காரியம்' என்று கூறினார். இன்று விஞ்ஞானம் வளர்ந்துவிட்டதாகக் கூறப்படுகின்ற போதிலும், இந்த இயக்கத்தின் தன்மைகளையோ காரணிகளையோ அதனால் கண்டு பிடிக்கமுடியவில்லை. இதனால் மெஞ்ஞானம் என்றுமே உயர்ந்து நிற்கிறது. சூரியன் 12 மாதங்கொண்ட ஓர் ஆண்டில் 12 இராசிகளில் சஞ்சரிக்கிறது. ஆடிமாதத்தில் கர்க்கடக இராசியில் சஞ்சாரம் செய்கிறது. இந்த இராசியின் அதிபதி சந்திரன் எனச் சோதிடம் கூறுகிறது. இது பெண் கிரகம் எனவும் தாய் எனவும் வர்ணிக்கப்படுகிறது. இதுவே சாத்தியமாகும். உலகை இயக்கும் சக்தியைப் பெண்ணாக உருவகப்படுத்தி எமது முன்னோர் வழிபட்டனர். இதுவே இன்றும் தொடர்கிறது. சக்தியில் எட்டுப் பரிவாரங்கள் தொழிற்படுகின்றன என்று மெஞ்ஞானிகள் கூறியுள்ளனர். இதன்பிரதிபலனாக அனிமா, மஹிமா, கிரிமா, பிராப்தி, பரகாம்யம், ஈசித்துவம், வசித்துமுவம் உள்ளிட்ட பலாபலன்களை சக்தி வழிபாட்டின் மூலம் சித்தர்கள் பெற்றனர். இவற்றைப்பெற அவர்கள் பராசக்தியை வழிபடத் தொடங்கும் நாள் ஆடிப்பூரமாகும்.
ஆதி சங்கரராகிய ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள் ஆடிப்பூரத்திலேயே அன்னையை வழிபட்டு அருள்பெற்றார் என்கிறது வரலாறு. மேலும் பூமாதேவி கங்காதேவி என்னும் ஆண்டாளாக அவதரித்து அருள்பாலித்தாள் என்று வைஷ்ணவர்கள் நம்புகிறார்கள். உலகின் அன்னை எனப் போறப்படும் சக்தியின் அருளினாலேயே தமது இஷ்ட பலாபலன்களைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையில் மக்கள் சைவ ஆலயங்கள் தோறும் ஆடிப்பூரத் தினத்தைப் பெரு விழாவாகத் தொன்று தொட்டுக் கொண்டாடி வருகின்றனர். துன்பச் சூழலிலிருந்து எம்மைப் பாதுகாக்கக்கூடிய சக்தி அன்னை பராசக்திக்கே உண்டு. அவளை வழிபட்டு ஆன்ம ஈடேற்றம் பெறப் பிரார்த்திப்போம்.

# வண்ணத் துகிலிகை கலைக் கண்காட்சி

கொடிகாமம், ஜுலை 22
'வண்ணத் துகிலிகை கலைக் கண்காட்சி' இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மீசாலையிலுள்ள ஜானு ஆர்ட் அக்கடமியில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகத் தொழிலதிபரும் சமூக செயற்பாட்டாளருமான க.பாஸ்கரன், விசேட மருத்துவ நிபுணர் திருமதி செல்வரஜனி வெற்றிவேலு முகுந்தன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச-ரி3-159)

# வல்வையில் கணிதவிழா

யாழ்ப்பாணம், ஜுலை 22
வல்வை சிதம்பரா கணிதப் போட்டிக்குழு நடத்தும் கணித விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வல்வை முத்துமாரியம்மன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாணம் சிதம்பராக் கல்லூரி அதிபர் வி.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக்டிறஞ்சன் கலந்துகொள்ள உள்ளார். (ச)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் இழுபறியாகும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை.

**இடபம்:** மனதில் சிறு சிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பொறுமை அவசியம். இளைய சகோதரர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** பரபரப்பாகச் செயல்படும் நாள். நினைத்த காரியத்தை நினைத்தபடி முடிப்பீர்கள். மனவருத்தங்கள் நீங்கும். தேவையான அளவுக்கு பணம் இருப்பதால் செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். அவ்வப்போது மனதில் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**சிம்மம்:** அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். காரியங்களில் பொறுமை மிக அவசியம். அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்பு கரையும். சிலருக்குக் கடன் வாங்கக்கூடிய சூழ்நிலையும் ஏற்படும்.

**கன்னி:** செலவுகள் அதிகரிக்கும் நாள். என்றாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளிப்பதில் சிரமம் இருக்காது. மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது. ஆதாயம் கிடைக்கும்.

**துலாம்:** ஆதாயம் கிடைக்கும். எதிர்பார்த்த காரி யம் அனுகூலமாக முடியும். நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். மனஇறுக் கம் நீங்கி நிம்மதி உண்டாகும்.

**விருச்சிகம்:** பதற்றம் இல்லாமல் செயற்படவேண்டிய நாள். வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். சோர்வு உண்டாகும். உறவினர்களின் வருகையால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சில பிரச்சினைகள் ஏற்படும்.

**மகரம்:** மமனதில் அவ்வப்போது சில குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து வரும். சகோதரர்கள் மூலம் ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**மீனம்:** ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்

“சமஷ்டியைக் கோருவதன் மூலம் தூங்கிக்கொண்டிருக்கும் தெற்கு இளைஞர்களை மீண்டும் தட்டியெழுப்பி விடாதீர்கள்'' என்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் அரசியல் தலைவர்களுக்குத் தெரிவித்துள்ளார் இராஜாங்க அமைச்சரும் வடமாகாணத்தின் முன்னாள் ஆளுநருமான கலாநிதி சுரேன் ராகவன். ‘பொன்சேகாவுடன் இணைந்து சிங்கக் கொடியை அசைத்த தமிழ்த் தலைவர்கள் பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகாரப்பகிர்வுக்கு இணங்கிய பின்னர் இன்று சமஷ்டி முறையைக்கோருவது ஒழுக்கத்தை மீறிய செயல்’ என்றும் அவர் ‘அரசியல் ஒழுக்கம்’ தொடர்பில் நாடாளுமன்றத்தில் பாடம் எடுத்திருக்கின்றார்.

தேசியக் கட்சிகளின் மனோநிலையில் நின்று சிந்திக்கும் ஒருவர் இவ்வாறான கருத்துகளை வெளியிடுவது இது முதல்முறையல்ல. சுரேன் ராகவனின் அரசியல் என்பது தமிழ்த் தேசியத்தின் பாற்பட்டதல்ல. மாறாக பேரினக் கட்சிகளின் பாற்பட்டதே. ஆனால், அவர் வடக்கு மாகாண ஆளுநராகச் சில வருடங்கள் செயற்பட்டுள்ளார். அதனால் வடக்கு மக்களின் அபிலாஷைகள் என்னவென்ற உண்மை அவருக்கு உள்ளூரத் தெரிந்திருக்கும். ஆதலால், சமஷ்டிக் கோரிக்கை என்பது தமிழ்த் தேசியக் கட்சிகளின் கோரிக்கையா அல்லது தமிழர்களின் கோரிக்கையா என்ற தெளிவை – புரிதலை முதலில் அவர் தனக்குள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். சமஷ்டி என்பது தமிழ்த் தேசியக் கட்சிகளின் கோரிக்கையோ அல்லது அந்தக் கட்சிகளின் அரசியல் நிலைப்பாடோ அல்ல. மாறாகத் தமிழர்களின் அரசியல் அபிலாஷையே அது. மக்களின் இந்த அபிலாஷையைத்தான் தமிழ்த் தேசியக் கட்சிகள் பிரதிபலிக்கின்றன.

தம்மைத் தாமே ஆளுகின்ற ‘அரசியலுரிமை’ சிங்கள – பேரினவாத அடக்குமுறைச் சித்தாந்தத்தைக் கொண்ட தலைவர்களிடமிருந்து கிட்டுவதற்கு வாய்ப்பில்லை என்ற யதார்த்தத்தை உணர்ந்ததாலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதம்தூக்கத் தலைப்பட்டனர். ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் அரசியல் ரீதியாக தமிழினத்தின் உரிமைக்காக தமிழ் மக்களுக்கு இருந்த ஒரேயொரு தெரிவு தமிழ்த் தேசியக் கட்சிகள் மாத்திரமே. எனவே தமது கோரிக்கைகளை தம்சார்ந்த கட்சிகள் ஊடாக தமிழ் மக்கள் வெளிப்படுத்தி வருகின்றனர். ஆயுதப் போராட்டம் வலுப்பெற்றிருந்த காலத்தில் தனித்தாயகக் கனவோடு இருந்த தமிழ் மக்களை, முள்ளிவாய்க்காலில் அந்தக் கனவை புதைத்து விட்டு மீண்டும் சமஷ்டியையாவது பெறுவோம் என்ற நிலைக்கு காலம் கொண்டுவந்து தள்ளியது. அதனால் தமிழ் மக்களின் குரலாக சமஷ்டியை தமிழ்த்தேசியக்கட்சிகள் முன்வைத்து வருகின்றன. மாறாக தமிழ்க்கட்சிகள் மட்டும்தான் சமஷ்டியைக் கோருகின்றன; தமிழ் மக்கள் அவ்வாறு கோரவில்லை என்றவாறாக சுரேன் ராகவன் வகையறாக்கள் அர்த்தப்படுத்த முனைவது அபத்தத்திலும் அபத்தமே.

பொன்சேகாவுடன் இணைந்து சிங்கக்கொடியை அசைத்த தமிழ்த் தலைவர்கள் பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகாரங்களைப் பகிர்வதற்கு உடன்பட்டுவிட்டு, இப்போது சமஷ்டியைக் கோருவது ‘அரசியல் ஒழுக்கமற்ற’ செயல் என்பதை அழுத்தம்திருத்தமாகப் பதிவுசெய்திருக்கும் ‘நேர்மையாளனான’ சுரேன் ராகவனுக்கு அதற்கு முன்னர் சுமார் **30** ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவோடு உடன்பட்ட **13**ஆவது திருத்தத்தைக் கூட இன்னமும் கொழும்பு நடைமுறைப்படுத்த வக்கற்று நிற்கின்றதே இந்த உடன் படிக்கை மறுப்பு ‘அரசியல் ஒழுக்கமற்ற’ செயலாகப் படவில்லையா? அதற்கெதிராக அதாவது **13**ஆவது திருத்தத்தை அப்படியே நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்த ‘யோக்கிய மாமணியான’ சுரேன் ராகவன் தயாராக இருக்கின்றாரா?

‘அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்’. சுரேன் ராகவனும் இதைத்தெரிந்திருப்பார் என்று நம்பலாம். ஏனெனில் இலங்கையில் பௌத்தம் பற்றி ஆராய்ந்தவரல்லவா அவர். தன்னுடைய விசுவாசத்தை அவர் தனது எஜமானர்களான பௌத்த பேரினவாதிகளிடம் காட்டிக் கொள்ளட்டும். மாறாக தமிழ் மக்களின் ஆத்மார்த்தமான உரிமைகளோடு இனிமேலாவது சகட்டுமேனிக்கு கருத்து கந்தசாமியாக மாறாதிருக்கட்டும்.

நாளொரு நல்வார்த்தை

“உங்களின் வறுமை உடன் பிறந்தது, தவிர்க்க முடியாதது. தீர்க்க முடியாதது என்றெண்ணுவது மடமை ஆகும்”

– டாக்டர் அம்பேத்கர்




# தேரவாத பௌத்தத்தை பூகோள மயமாக்குவேன்

## ஜனாதிபதி ரணில் உறுதி



**கொழும்பு, ஜூலை 22**

**ஏற்கனவே உறுதியளித்ததன்படி செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தேரவாத பௌத்தத்தை சர்வதேசத்துக்கு எடுத்துச் செல்வேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

மாத்தளையில் நடைபெற்ற, பௌத்தத் துறவிகளை ‘துறவுநிலைப்படுத்தும்’ நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

‘ஓர் அரசாங்கமாக திரிபீடகத்தைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. ஒரு பௌத்த நாடக பௌத்த தர்மத்தை உலகெங்கும் எடுத்துச்செல்லவேண்டியது எமது கடமை. புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பௌத்த நூல்களை நாம் பாதுகாக்க வேண்டும். நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி துட்டகைமுனு காலத்தில் நடைபெற்ற பௌத்த போதனைகளைப் பற்றி நாம் அறிந்து கொள்ளலாம்.

ஜப்பானில் மகாயான பௌத்தம் தொடர்பாக பல சந்தேகங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் இந்த சந்தேகங்களை நாம் தீர்த்து வைக்கலாம். தேரவாத பௌத்தத்தை நுண்ணறிவு தொழில்நுட்பத்தினூடாக சர்வதேச மட்டத்துக்கு எடுத்துச்செல்வதற்கு 200 மில்லியன் ரூபாவை ஒதுக்கத் தீர்மானித்துள்ளோம். தேவைப்பட்டால் மேலதிக நிதி ஒதுக்கப்படும். நுண்ணறிவு தொழில்நுட்பத்தினூடாக தேரவாத பௌத்தத்தை சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு செல்வதே எமது முதல் நடவடிக்கை. இன்றைய டிஜிட்டல் உலகத்தில் சமய நூல்களான பைபிள், திரிபீடகம் போன்றவற்றையும் மக்கள் சமூக ஊடகங்களூடாகவே வாசிக்கின்றனர் - என்றார். (ம)

## பல்பொருள் அங்காடிக்கு இறக்குமதி முட்டைகள்!



கொழும்பு, ஜூலை 22

இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை பல்பொருள் அங்காடிகள் ஊடாக விற்பனை செய்யும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ இந்தத் தகவலை தெரிவித்துள்ளார். இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டையின் அளவு மேலும் அதிகரிக்கப்படும். அதன் பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை பல்பொருள் அங்காடிகள் ஊடாக விற்பனை செய்யும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)



## மொனராகலையில் நிலநடுக்கம் பதிவு

கொழும்பு, ஜூலை 22

மொனராகலையில் நேற்றுக் காலை 9.06 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 2.6 அலகுகளாகப் பதிவாகியுள்ளது. புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் இதனை உறுதி செய்துள்ளது. (ம)

**நாளை**

**23.07.2023**
ஞாயிற்றுக்கிழமை
ஆடி 07

சுபநேரம் : 09.02 - 10.32
ராகுகாலம் : 04.32 - 06.02

ஷஷ்டி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருந்தூர்மலை விவகாரம்:

# கனேடியத் தூதுவருக்கு எடுத்துரைத்த ரவிகரன்

முல்லைத்தீவு, ஜூலை 22
கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி யில் சர்வதேச கண்காணிப்பு, குருந்தூர் மலையில் சைவவழிபாட்டுரிமை பறிப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸூக்கு வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெளிவுபடுத்தியுள்ளார். இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸ் மற்றும் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடல் முல்லைத் தீவில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளில் சர்வதேச கண்காணிப்பு இருக்கவேண்டும் என்று கனேடியத் தூதுவருக்கு ரவிகரன் வலியுறுத்தினார். அத்தோடு குருந்தூர் மலையில் சைவவழிபாட்டுரிமை மறுக்கப்பட்ட விடயம், தமிழ்மக்கள் பொலிஸாரால் தாக்கப்பட்டிருந்தமை தொடர்பிலும் கனேடியத் தூதுவருக்கு தெளிவுபடுத்தப்பட்டது. தன்னிடம் முறையிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் தாம் கவனம் செலுத்துவதாக கனேடியத் தூதுவர் உறுதியளித்தார்.

(ச-246)

# மாவிட்டபுரம் கந்தசுவாமி மஹோற்சவம் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 22 வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 25 தினங்கள் உற்சவம் இடம்பெறுவதுடன் மதியம் அன்ன தான நிகழ்வும் நடைபெறும்.

எதிர்வரும் ஓகஸ்ட் 14 ஆம் திகதி முக உத்தர தேர்த் திருவிழாவும் மறுநாள் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆடி அமாவாசை உற்சவம் கீரிமலை கண்டகி தீர்த்தக் கரையிலும் நடைபெறவுள்ளன.

உற்சவம் நடைபெறும் காலங்களில் அறநெறி மாணவர்களின் கலை நிகழ்வுகள் தினமும் மாலை 6 மணிக்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

ஆலயத்துக்கு வருகைதரும் பக்தர்கள் புனிதத்தைப் பாதுகாக்கும் வகையில் கலாசார உடை அணிந்து வருமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

(ச-ரி2)


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

பாடங்களில் குறைந்த புள்ளிகளைப் பெறுகின்றீர்களா? கவலை வேண்டாம்.
ஆண்டு 6 இல் இருந்து A/L வரை பிரத்தியேக வகுப்புகள்.
விரும்பிய பாடங்கள் தெரிவு, சிறந்த ஆசிரியர்கள்
பிரான்பற்று வீதி, சங்கானை.
077 675 1649
(cs 513251 (N-1)

**காணி விற்பனைக்கு**

பலாலி வீதி கோண்டாவில் சந்தியிலிருந்து 150 m தூரத்தில் 1 1/2 பரப்புக் காணித்துண்டு விற்பனைக்குண்டு.
075 214 4404, 076 117 7847


# INVITATION FOR BID (2023/09)
## Regional Directorate of Health Service Jaffna.

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Directorate of Health Services, Jaffna, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**

*"Bidding will be conducted through National Competitive Bidding in Public Finance Circular No. 04/2016 (iii) and its amendments" Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated, 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.*

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Directorate of Health Services,No 572/3 Hospital Road Jaffna. (T.P:021 222 4966, Fax: 021 222 9971) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table, upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment should be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road, Jaffna** on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| CATEGORY I | | |
|---|---|---|
| | **Document Issuing/Purchasing Period** | **From 24.07.2023 until 04.08.2023** |
| | **Pre-Bid Conference** | **At 2.30 P.M on 31.07.2023** |
| | **Closing and Opening of Bids** | **At 10.30 A.M on 07.08.2023** |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refunda -ble Fees | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2023/ Unicef/W/01 | Construction of Patient waiting shed and Repair and Renovation work at central clinic MOH Kopay | 1.89 | 78Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 19,000.00 | Till 23.10.2023 |
| NP/04/41/2023/ Unicef/W/02 | Repair and Renovation of PHC Building at Atchchelu | 1.65 | 76 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 17,000.00 | Till 23.10.2023 |
| NP/04/41/2023/ Unicef/W/03 | Repair and Renovation of PHC Building at Vatharavaththai | 1.77 | 77 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 18,000.00 | Till 23.10.2023 |
| NP/04/41/2023/ Unicef/W/04 | Repair and Renovation of PHC Building at Urelu | 1.42 | 72 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 14,500.00 | Till 23.10.2023 |
| NP/04/41/2023/ Unicef/W/05 | Renovation of PHC Building at Saravanai and Allaipiddy | 1.51 | 73 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 15,500.00 | Till 23.10.2023 |
| NP/04/41/2023/ Unicef/W/06 | Renovation of MOH Building at Velanai | 0.76 | 63 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 8,000.00 | Till 23.10.2023 |
| NP/04/41/2023/ Unicef/W/07 | Renovation of PHC Building at Sanguvely and Central Clinic MOH Uduvil | 1.62 | 76 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 16,500.00 | Till 23.10.2023 |
| NP/04/41/2023/ Unicef/W/08 | Renovation of Patient waiting area at central clinic MOH Chavakachcheri | 1.74 | 77 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 17,500.00 | Till 23.10.2023 |
| NP/04/41/2023/ Unicef/W/09 | Renovation of PHC Building at Madduvil South | 1.71 | 76 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 17,500.00 | Till 23.10.2023 |
| NP/04/41/2023/ Unicef/W/10 | Renovation of PHC Building at Usan ,Eluthumadduval and Kachchai | 1.32 | 73 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 13,500.00 | Till 23.10.2023 |
| NP/04/41/2023/ Unicef/W/11 | Renovation of PHC Building at Maravanpulam and Madduvil North | 1.97 | 79 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 20,000.00 | Till 23.10.2023 |
| NP/04/41/2023/ Unicef/W/12 | Renovation of PHC Building at Manthuvil | 1.73 | 77 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 17,500.0 | Till 23.10.2023 |
| NP/04/41/2023/ Unicef/W/13 | Renovation of PHC Building at Kalapoomi and Ponnalai | 0.97 | 69 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 10,000.00 | Till 23.10.2023 |
| NP/04/41/2023/ Unicef/W/14 | Renovation of Central Clinic MOH Maruthankerny | 1.26 | 73 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 13,000.00 | Till 23.10.2023 |
| NP/04/41/2023/ Unicef/W/15 | Improvement Work at Centeral Clinic MOH Kayts | 1.51 | 73 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 15,500.00 | Till 23.10.2023 |
| NP/04/41/2023/ Unicef/W/16 | Renovation of PHC Building at Chinankaladdy | 1.70 | 77 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 17,000.00 | Till 23.10.2023 |
| NP/04/41/2023/ Unicef/W/17 | Fencing work at PHC Melinsimunai,Kayts | 0.74 | 63 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 7,500.00 | Till 23.10.2023 |
| NP/04/41/2023/ Unicef/SW/01 | Plumbing and Sanitary work at PHC Buildings Atchchelu,Urelu,Vatharavaththai and MOH Kopay | 0.60 | 59 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 6,000.00 | Till 23.10.2023 |
| NP/04/41/2023/ Unicef/SW/02 | Water Supply & Sanitary work at PHC Manthuvil and Madduvil South | 0.69 | 62 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 7,000.00 | Till 23.10.2023 |
| NP/04/41/2023/ Unicef/SW/03 | Water Supply & Sanitary work at PHC Uduththurai | 0.46 | 52 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 5,000.00 | Till 23.10.2023 |
| NP/04/41/2023/ Unicef/SW/04 | Water Supply & Sanitary work at PHC Chinankaladdy and MOH Tellippalai | 0.89 | 67 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 9,000.00 | Till 23.10.2023 |
| NP/04/41/2023/ Unicef/SW/05 | Renovation of Building (Plumbing) at PHC Ponnalai and MOH Changanai | 0.69 | 62 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 7,000.00 | Till 23.10.2023 |

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service,**
**Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பருடன் இருவர் கைது

பல இலட்சம் பெறுமதியான திமிங்கிலத் திலிருந்து பெறப்ப டும் 'அம்பர்' வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு சந்தேகந பர்கள் மாத்தறை யில் கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

(ச-இ)


## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில்
தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும்
திருமதி **புஸ்பராஜா வக்ஷலா**
அவர்களின் அன்பு மகன்

**எழில்நாத்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரி சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(cs.51340) (N.1)

## நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
# பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிக்கு 18 தொடக்கம் 45 வயதிற்குட் பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப படிவத்தினை சங்க காரியாலயத்தில் 10/- செலுத்தி பெற்றுக்கொள்ளவும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் என்பவற்றை இணைத்து **தலைவர, நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், ஆடியபாதம் வீதி திருநெல்வேலி** என்ற முகவரிக்கு 12.08.2023ற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**1. பதவி - விற்பனையாளர் 308 / 17**

சம்பள அளவுத் திட்டம் **16615 - 19265**
**30x10-145x10**

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ. கூட்டுறவு ஊழியர் கனிஸ்ட தராதரப்பத்திரம் / 08ம் தர கல்விச் சான்றிதழ்

**தலைவர்,**
**நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி.**
தொ.இல : **021 222 2143 , 021 222 2969**

(cr.37292) (N.1)

# மரண அறிவித்தல்



பிறப்பு 30 • 09 • 1938

இறப்பு 18 • 07 • 2023

## புவனேஸ்வரி செல்லையா

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட புவனேஸ்வரி செல்லையா கடந்த (18.07.2023) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவப்பிள்ளை இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா நாகமுத்து தம்பதியரின் மருமகளும், செல்லையா **(செல்லையா அன் பிறதேர்ஸ் - காங்கேசன்துறை)** அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, பரமேஸ்வரி, சிவஞானசுந்தரி, பாலகிருஷ்ணன் ஆகியோரின் சகோதரியும், சாரதாதேவி, காலஞ்சென்ற அன்பழகன் மற்றும் சகுந்தலாதேவி, சரசாதேவி, கலையழகன், அருளழகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுபேசன், தமிழ்வளர்செல்வி, தேவராஜா, ஞானச்சந்திரன், அமுதா ஆகியோரின் அன்பு மாமியும், அஞ்சலிகா, நிரோஷன், மஜந்தா, மஞ்சுதன், மாரீசன், சுகன்யா, சாருஜா, நிஷானுஜா, கிருஷானா, டிசானி, ராலன் ஆகியோரின் பேர்த்தியும், பிறிணிஸ், நைனிகா, நிகில், யுவினா, சைரஸ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.07.2023) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**1010/12 B, காங்கேசன்துறை வீதி,**
**நாச்சிமார் கோவிலடி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**கந்தையா செல்லையா** (கணவர்)
**077 554 6922**
**சகுந்தலாதேவி தேவராஜா** (மகள்)
**077 047 0182, 021 222 5554**

(cs51333) (N-1)

# மரண அறிவித்தல்

## திருமதி ஜெயராஜசிங்கம் பத்மாதேவி



தோற்றம் 05.09.1946

மறைவு 19.07.2023

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொழும்பு மற்றும் அவுஸ்திரேலியா மெல்பேனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயராஜசிங்கம் பத்மாதேவி கடந்த (19.07.2023) புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துரட்ணம் தவமணி தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம் பகவதி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஜெயராஜசிங்கத்தின் அன்பு மனைவியும், ஜெனினி (அவுஸ்திரேலியா), உஷேந்தன் (லண்டன்), ஜெயந்தன் (அவுஸ்திரேலியா), சுதாயினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சரபிந் (அவுஸ்திரேலியா), பானு (லண்டன்), சியாமளபாலினி (அவுஸ்திரேலியா), தயாபரன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கமலாதேவி (உரும்பிராய்), றோகினிதேவி (உரும்பிராய்), தவரட்ணம் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற மாலினிதேவியின் சகோதரியும், கனகரட்ணம், தர்மஜெயசூரியர், உமா, துரைசிங்கம் தினமணி, இரத்தினசிங்கம் - சரஸ்வதி, பூபாலசிங்கம் - பானுமதி, கேதிஸ்வரன் - மகாலக்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சியாம், சரன், விக்கேஷ், பிரம்மியா, ஷோபிதா, ரனிஷா, விபிஷன் லவீனியா, லஷாலி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அனோயா, ரோகன்ராஜ், நிரோயா, சயிவ், தேனுகன் ஆகியோரின் பாசமுள்ள பெரிய தாயும், தர்ஷிகா, மோகனின் பாசமுள்ள மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.07.2023) ஞாயிற்றுக்கிழமை Location Boyd Chapel 600 Princess Highway, Springvale VIC 3171அவுஸ்திரேலியாவில் நடைபெறும். https://smct.org.au/view/ 84680 3443 ஊடாக 23.07.2023 அவுஸ்திரேலியா நேரப்படி 10.30 a.m க்கு நேரடியாக பார்வையிடலாம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.-

**அரச வீதி, உரும்பிராய்.**
**த.றோகினிதேவி**
**(சகோதரி - 021 223 0785)**
**ச.ஜெனினி**
**(மகள் - 006 142 448 3922 )**

**தகவல்:**
**தர்மஜெயசூரியர் ரோகன்ராஜ்**
**(பெறாமகன்- 077 175 8485)**

(cr.37276) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறவிடப்பட்டுள்ளது


க. ஸ்ரீதரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல. (662590665V), சாரதி அனுமதிப்பத்திரம். வரி காப்புறுதி பத்திரம் போன்றவை திருநெல்வேலியிலிருந்து கொக்குவிலுக்கிடைப்பட்ட தூரத்தில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும்.

**077 820 1195, 075 041 3579**

(CS31334 M-1)

## மரண அறிவித்தல்

மலர்வு 08 . 01 . 1957



உதிர்வு 21 . 07 . 2023

### திரு.வேலுப்பிள்ளை ஸ்ரீதரன்

**(ஓய்வுநிலை ஆங்கில ஆசிரியர், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் - ஆங்கிலம், தென்மராட்சி, வாழ்க்கைத் தேர்ச்சிக்கான ஆங்கில பாடஇணைப்பாளர் - வடமாகாணம், பகுதி நேர விரிவுரையாளர் ஆங்கிலம் - யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடம் - அறிவியல்நகர்)**

மடத்தடி. கல்வயலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.வேலுப்பிள்ளை ஸ்ரீதரன் அவர்கள் நேற்று (21.07.2023) வெள்ளிக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை ஆசிரிய தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இளையதம்பி நாகரத்தினம் தம்பதியரின் மூத்த மருமகனும், கமலாம்பிகை (ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் -தென்மராட்சி) அவர்களின் அன்புக் கணவரும், றம்யா (தாதிய உத்தியோகத்தர் - தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலை), கிறீடி (கட்டடப் பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தில்லைநாதன் (ஓய்வுநிலை விரிவுரையாளர் ஆங்கிலம்) மற்றும் காலஞ்சென்ற கலாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.07.2023) ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


மடத்தடி, கல்வயல், சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர். T.P:077 5141 594

(CS 25587) A-1

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### சுப்பிரமணியம் பிரசாந் (B.Sc)



உலகினில் ஓர் மனிதனுக்கு எல்லாவற்றையும் விட உயர்ந்த அழகைக் கொடுப்பதும் கொடுக்க கொடுக்க குறையாத செல்வமும் அறியாமை எனும் இருளைப் போக்கி அறிவினைத்தருவதும் சென்ற இடமெல்லாம் சிறப்பினைப் பெற்றுத் தருவதுமாகிய கல்விச் செல்வத்தினைக் கற்று கடந்த 20.07.2023 (வியாழக்கிழமை) யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 37ஆவது பொது பட்டமளிப்பு விழாவினில் விஞ்ஞானமானிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்ட எமது உறவினராகிய **சுப்பிரமணியம் பிரசாந் (B.Sc)** அவர்களை மனதார வாழ்த்துவதோடு அவர் மேன்மேலும் பல பட்டங்களைப் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல இறைவன் அருளும் ஆசியும் வேண்டி வாழ்த்துக்கள் கூறுகின்றோம்.


வாழ்த்துவோர்:-

**உத்தமசீலன் குடும்பத்தினர்.**
**விசாகன் குடும்பத்தினர்.**

(CS 25583) A-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 30 . 04 . 1945



இறப்பு 20 . 07 . 2023

### பாலசிங்கம் நாகம்மா

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது யாழ். கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் நாகம்மா நேற்றுமுன்தினம் (20.07.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மருதப்பு தெய்வானை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பாலசிங்கத்தின் (புங்குடுதீவு மகாவித்தியாலய முன்னாள் பாதுகாவலர்) அன்பு மனைவியும், ஜெயாநந்தினி (கொக்குவில்), சுதாநந்தினி (பிரான்ஸ்), தயாநந்தினி (புங்குடுதீவு), லதாநந்தினி (பிரான்ஸ்), யசோக்குமார் (பிரான்ஸ்), சிவானந்தினி (பிரான்ஸ்), நிஜாந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மதியழகன் (சுகன்யா நகையகம் யாழ்ப்பாணம்), கேதீஸ்வரன் (பிரான்ஸ்), கலைச்செல்வன் (புங்குடுதீவு), அருள்பாலன் (பிரான்ஸ்), ராஜரஜனி (பிரான்ஸ்), துஸ்யந்தன் (பிரான்ஸ்), சுதாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான அமிர்தம்மா, மதியாபரணம், சற்குணம், திருவாதிரை மற்றும் செல்வராசா (பிரான்ஸ்), இராசமணி (கிளி - கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை, அன்னலெட்சுமி, இராசையா மற்றும் மனோன்மணி, ஞானஜோதி, ஏரம்பமூர்த்தி, காலஞ்சென்றவர்களான நல்லதம்பி, சின்னத்துரை, நடராசா, ஐயம்பிள்ளை, பொன்னம்மா ஆகியோரின் மைத்துனியும், இனியா (பிரான்ஸ்), இனிஷ் (பிரான்ஸ்), கனிஷ் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், கம்சிகா (கொக்குவில்), பிரேமசாந் (பிரான்ஸ்), டிசாந் (கொக்குவில்), சயந்தினி (பேராதனை பல்கலைக்கழகம் - கண்டி), தமிழ்மாறன், தனுப்பிரியன், பிரியங்கா (பிரான்ஸ்), நிவேதியன், சதூர்சனா (புங்குடுதீவு), காலஞ்சென்ற திவ்வியா மற்றும் விதுஷன் (பிரான்ஸ்), துலக்ஷன், துவாரகி (பிரான்ஸ்), அனுஸ்தா (பிரான்ஸ்), தினேஸ் (பிரான்ஸ்), ஜோபிகா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.07.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புங்குடுதீவு 7 ஆம் வட்டாரம். 076 453 8904**

**தகவல்: குடும்பத்தினர்**

(CS.44723) (2.6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 10 . 1957



மறைவு 20 . 07 . 2023

### திருமதி சிறிகரன் துளசி
(பண்டத்தரிப்பு)

யாழ். பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிறிகரன் துளசி கடந்த (20.07.2023) வியாழக்கிழமை மாலை 5.45 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை நேசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிறிகரன் அவர்களின் பாசமிகு மனைவியும், விஜயதாஸ், விஜஜேந்திரன், விஜயகரன், விஜயபரன், விஜயரூபன், விஜயரூபி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.07.2023) ஞாயிற்றுக் கிழமை அவரது பண்டத்தரிப்பு காலையடி இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பில் துறை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 63 மருந்துகள்...

தரமற்றவை எனத் தெரிய வந்தள்ளதாக சுகாதார அமைச்சின் செயலர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார். இந்தத் தரமற்ற மருந்துகள் மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - மேலும் இரண்டு வகையான மயக்க மருந்துகள் பாவனையிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

(அ-ஒ-இ)

### நெடுங்கேணியில்...

(வயது-58) என்பவரே இடியன் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வன்னிப் பிராந்தியத்தில் இடியன் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லும் கலாசாரம் வேகமாக அதிகரித்து வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுவரும் நிலையில், நேற்றும் மீண்டும் ஒரு கொலைச் சம்பவம் அரங்கேறியுள்ளது.

உயிரிழந்த மகேஸ்வரன் விவசாயி என்றும், அவர் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது, பக்கத்துத் தோட்டத்தில் நின்ற ஒருவர் கல்லால் எறிந்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அவர், மண்வெட்டியுடன் விரட்டிச் சென்றுள்ளார். தப்பியோடியவர் பக்கத்திலுள்ள தனது வீட்டுக்குச் சென்று, அங்கிருந்த இடியன் துப்பாக்கியை எடுத்து வந்து சுட்டதில், மகேஸ்வரன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என முதல்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக நெடுங்கேணிப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ-ஒ-18)

### 25 விடுமுறை...

கள் அடங்கிய வர்த்தமானியை பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ளது. அதன்படி, 2024ஆம் ஆண்டில் இலங்கையில் 25 பொது மற்றும் வங்கி விடுமுறை நாள்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)




## முறைப்பாடளிக்கச் சென்றவர் மயங்கி வீழ்ந்து உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யச்சென்ற ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாண மருத்துவமனை வீதியைச் சேர்ந்த எஸ்.ஹரிசந்திரன் (வயது-66) என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் நகரில் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்தி வருகிறார். அந்தப் பகுதியிலுள்ள கருவாட்டுக்கடைக்காரருக்கு பணம் கடனாகக் கொடுத்ததாகவும், பணத்தை மீளக் கேட்டபோது, தகராறு ஏற்பட்டு, கருவாட்டுக்கடைக்காரரால் தாக்கப்பட்டதாகவும் தெரிவித்தே அவர் முறைப்பாடு செய்யச்சென்றுள்ளார்.

பொலிஸ் நிலையத்துக்குள் நுழைந்த சமயத்தில் அவருக்கு மயக்கம் ஏற்பட்டு நிலத்தில் விழுந்து உயிரிழந்தார்.

அவருடன் முரண்பட்டவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஒ-26-27)



## வங்குரோத்துக் குழுவின் தலைமையிலிருந்து விலகல்

### சாகர காரியவசம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 22

நிதி வங்குரோத்து நிலைக்கான காரணங்களை ஆராய்ந்து நாடாளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கும், அது தொடர்பில் தமது முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான நாடாளுமன்ற விசேட குழுவின் தலைமைப் பதவியிலிருந்து ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் பதவி விலகுவதாகத் தெரிவித்துள்ளார்.

'நாடு வங்குரோத்து நிலையை அடையும் போது நாட்டின் ஆட்சிக்குப் பொறுப்பாக இருந்த பிரதான கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலர் இந்தக் குழுவுக்கு தலைமை வகிப்பது, குழுவின் சுயாதீனத் தன்மைக்குப் பாதிப்பாகும் என்பதால் குழுவிலிருந்து இராஜினாமாச் செய்வதாக அவர் அறிவித்துள்ளார்' என நாடாளுமன்ற ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ஒ-இ)

## விபத்தில் காயமடைந்த முதியவர் உயிரிழப்பு

சாவகச்சேரி, ஜூலை 22

வீதி விபத்தில் காயமடைந்த முதியவர் கடந்த புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த கந்தையா சுப்பிரமணியம் (வயது-77) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளையில் வீதியின் வளைவில் மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் மோதிகாயமடைந்தமுதியவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் கடந்த புதன்கிழமை உயிரிழந்துள்ளார். (அ-ஒ-9)

## மருந்து ஒவ்வாமை மற்றொருவர் சாவு!

கொழும்பு, ஜூலை 22

நுண்ணுயிர்க் கொல்லி மருந்தொன்று வழங்கப்பட்ட பின்னர் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக கேகாலை மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப் பட்ட நோயாளர் ஒருவர் கடந்த செவ்வாயன்று உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரேத பரிசோதனையில் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக கேகாலை மருத்துவமனையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். 57 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ச-இ)

### ஈரப்பெரிய குளத்தில்

## தும்புத் தொழிற்சாலையில் நேற்று பெரும் தீ விபத்து

வவுனியா, ஜூலை 22

ஈரப்பெரியகுளம் தும்புத் தொழிற்சாலையில் திடீர்த் தீ விபத்து ஏற்பட்டு தொழிற்சாலையின் ஒரு பகுதி தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

நேற்று மாலை 5.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

தும்புத் தொழிற்சாலையின் ஒரு பகுதியில் திடீரெனத் தீப் பரவல் ஏற்பட்டதை அங்கு கடமையில் இருந்தவர்கள் அவதானித்து, உடனடியாக அது தொடர்பில் பொலிஸாருக்கும், வவுனியாமாநகரசபைதீயணைப்புப் பிரிவினருக்கும் தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா மாநகரசபை தீயணைப்புப் பிரிவினர் இராணுவத்தினரின் துணையுடன் தீயைக் கட்டுப்படுத்த கடும் முயற்சிகளை மேற்கொண்டனர். தொழிற்சாலையின் இரு பகுதிகளில் தீப் பரம்பல் ஏற்பட்டிருந்தது.

நீண்ட போராட்டத்தின் பின்னர் நேற்று முன்னிரவு தீப்பரம்பல் கட்டுப்படுத்தப்பட்டது.

(அ-ஒ-18)

## மின்கம்பத்துடன் மோதியதால் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

வவுனியா, ஜூலை 22

வவுனியா - மன்னார் வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளாரென நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மின்சாரசபையில் கடமையாற்றும் வாரிக்குட்டியூர் பகுதியைச் சேர்ந்த சஜந்தன் (வயது - 32) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

வவுனியாவிலிருந்து மன்னார் வீதி வழியாக இளைஞன் மோட்டார் சைக்கிளில் சென்ற போது, 4ஆம் கட்டைப் பகுதியில் கட்டுப்பாட்டையிழந்து வீதியோரத் தில் இருந்த மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகி உயிரிழந்தார். (அ-ஒ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனநோயாளி வீரசேகரவை மன்றிலிருந்து அகற்றுங்கள்



## செல்வம் எம்.பி. ஆவேசம்

**கொழும்பு, ஜூலை 22**

**மனநோயாளிபோல் செயற்படும் சரத் வீரசேகரவை நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'தமிழர்களுக்கு 13இனை வழங்கவேண்டாம், சமஷ்டியை வழங்கவேண்டாம் எனக் கூறிக்கொண்டு மனநோயாளி போல் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர செயற்பட்டு வருகின்றார்.

எனவே, தமிழ் மக்களைச் சீண்ட வேண்டாம் என அவரை எச்சரித்துக்கொள்கின்றேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்றுள்ளார். அவர் எங்களை அழைத்துப் பேச்சு நடத்தியபோது 13இல் பொலிஸ் அதிகாரத்தை வழங்க முடியாது என்ற தொனியில் பேசினார். சமஷ்டி முறையிலான தீர்வே எமது விருப்பமாகும். 13ஆவது திருத்தச் சட்டம் என்பது அரசமைப்பில் உள்ள ஒரு விடயம்.

எனவே, அரசமைப்பை மீறுவதற்கு ஜனாதிபதிக்குக்கூட அருகதை இல்லை. ஆனால் ஜனாதிபதி உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் அரசமைப்பை மீறும் பாதகச் செயலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தீர்வை வழங்குவார்களா என்ற ஐயப்பாடு எம்முள் உள்ளது. போர்க்காலத்தில் சமையல் அறையில் இருந்த சரத் வீரசேகர, தற்போது மனநோயாளி போல் செயற்பட்டு வருகின்றார். குருந்தூர்மலை விவகாரத்திலும் மூக்கை நுழைக்கின்றார். சரத் வீரசேகர என்பவர் யார்? அவரை இயக்குவது யார்? அமெரிக்கத் தூதுவர், கனேடியத் தூதுவர் எல்லோரையும் நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் என அவர் வலியுறுத்துகின்றார். இந்தியாவையும் சாடுகின்றார். அந்த மனநோயாளியைச் சபையில் இருந்து வெளியேற்ற வேண்டும்' - என்றார். (ம-22-44)

# சட்டக்கல்லூரி அனுமதி கட்டணங்கள் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை 22

சட்டக்கல்லூரி சேர்க்கைக் கட்டணம் 15 ஆயிரம் ரூபாவாகவும், பரீட்சைக் கட்டணம் ஆயிரத்து 200 ரூபாவாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. புதிய வர்த்தமானியின் விதிமுறைகளுக்கமைய கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சட்டக் கற்கைகள் பேரவையுடன் நீண்ட கலந்துரையாடலின் பின்னரே இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை உயர்தரப் பெறுபேறுகள் வெளியாகும் முன்னரே சட்டக் கல்லூரிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டமை தொடர்பில் தீர்வு வழங்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் முன்னதாகத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கொழும்புக்கு வந்தது ஜப்பான் போர்க்கப்பல்



கொழும்பு, ஜூலை 22

ஜப்பான் கடல்சார் தற்காப்புப் படையின் 'இஹாசுசி' என்று அழைக்கப்படும் போர்க்கப்பலொன்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

151 மீற்றர் நீளமுள்ள இந்தக் கப்பல் 'நாசகாரி' என்ற பெயரால் தமிழில் அறியப்படுகின்றது. இந்தக் கப்பல் எதிர்வரும் 29 ஆம் திகதியன்று மீண்டும் ஜப்பானை நோக்கிப் புறப்படத் திட்டமிட்டுள்ளது. (ச-இ)

# இவ்வாண்டின் முதல் காலாண்டில் 211 மில். டொலர்!

இலங்கை முதலீட்டுச் சபையானது இவ்வாண்டின் முதல் காலாண்டில் 211 மில்லியன் டொலர் முதலீடுகளைப் பெற்றுள்ளதாக பதில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் முதலீடு செய்வதற்குத் தடையாக உள்ள சட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து அதற்கான தீர்வுகளை வழங்குவதற்காக 7 பேர் கொண்ட குழுவொன்று ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில், நீண்டகாலமாக உள்ள சட்ட அமைப்பில் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

முதலீட்டாளர்கள் எளிதாக முதலீடு செய்யும் சூழல் உருவாக்கப்பட வேண்டும். அத்துடன், இலங்கைக்கு வரும் முதலீட்டாளர்கள் எதிர்நோக்கும் மற்றுமொரு பிரச்சினை, அவர்கள் தமது முதலீடுகளுக்கான உரிமையைப் பெறவில்லை என்பதே. இதற்கு ஒரு தீர்வாக அவர்களின் முதலீட்டு உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் வகையில் சட்ட அமைப்பை நாம் புதுப்பிக்க வேண்டும்.

நாட்டில் எந்தவொரு முதலீட்டாளரும் மேற்கொள்ளும் முதலீடுகளுக்கு விசேட சலுகைகளை வழங்க அரசாங்கம் எதிர்பார்க்கிறது. முதலீட்டாளர்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்வதில், தற்போதுள்ள முறைகளுக்குப் பதிலாக புதிய மற்றும் முறையான வழிமுறைகளின் தேவை அவதானிக்கப்பட்டுள்ளது - என்றார். (ம)



# சீனப் பிரதிநிதிகள் சஜித்துடன் சந்திப்பு


யாழ்ப்பாணம், ஜூலை 22

சீன அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சந்திப்பில் இரு தரப்பினருக்கும் இடையே சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் பல்வேறு பரஸ்பர கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குப் பயணப்பட்டுள்ள நிலையில், சீன அதிகாரிகள் எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-ரி3)

# மாட்டுடன் மோதி விபத்து: ரயில் சேவை பாதிப்பு



வவுனியா, ஜூலை 22

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற கடுகதி ரயில் தாண்டிக்குளம் பகுதியில் மாட்டுடன் மோதியதில் அந்த மாடு உயிரிழந்துள்ளது.

இந்த விபத்தையடுத்து, ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டு மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

நீண்டநேரம் ரயில் பயணப்படாததையடுத்து மக்கள் பேருந்துகளில் ஏறிப் பயணத்தைத் தொடர்ந்தனர். அதன்பின்னர் இரவு 9.30 மணியளவில் பிறிதொரு புகையிரத இயந்திரம் கொண்டுவரப்பட்டு குறித்த புகையிரதம் எடுத்துச் செல்லப்பட்டது. (ச-18)

# கனேடியத் தூதரை வெளியேற்றுங்கள்!

## சரத் வீரசேகர கொக்கரிப்பு

கொழும்பு, ஜூலை 22

குருந்தூர்மலையில் இனமோதலை உருவாக்க முயன்ற தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் தமிழ்ப் பிரமுகர்களை கனேடியத் தூதுவர் சந்தித்துள்ளார்.

இது இராஜதந்திர சம்பிரதாயங்களுக்கு அப்பாற்பட்ட அவமானகரமான செயல் - இவ்வாறு தனது ருவிற்றர் பதிவில் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸ் இனமோதலை உருவாக்க முயலும் அரசியல்வாதியான து. ரவிகரன் உள்ளிட்ட தமிழ்ப் பிரமுகர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். 2 ஆயிரம் வருடத்துக்கு மேற்பட்ட பௌத்த ஆலயத்தை அழிக்க முயன்றோரை இவர் சென்று சந்தித்துள்ளார். இது தூதுவரின் இராஜதந்திர சம்பிரதாயங்களுக்கு அப்பாற்பட்ட மிகவும் அவமானகரமான செயல். எனவே கனேடியத் தூதுவரை இலங்கையால் ஏற்றுக்கொள்ள முடியாத நபராக அறிவிக்கவேண்டும் - என்றுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய...

தமிழ் மக்களின் அபிலாஷைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றும் என்ற நம்பிக்கையை இந்தியா கொண்டுள்ளது. சமத்துவம், நீதி மற்றும் சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்காக கொழும்பு மறுசீரமைப்புச் செயல்முறையை முன்னெடுத்துச் செல்லும் என்றும் இந்தியா எதிர்பார்க்கிறது. 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கும் இலங்கை தனது உறுதிமொழியை நிறைவேற்றும் என நம்புகின்றேன்' என இந்தியப் பிரதமர் மோடி தனது உரையில் குறிப்பிட்டார்.

இந்தியாவினதும் இலங்கையினதும் பாதுகாப்பு நலன்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்துள்ளதால் இந்தியாவின் அயல்நாடுகளுக்கு முன்னுரிமைக் கொள்கையில் இலங்கைக்கு விசேட இடமுள்ளதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இலங்கை நெருக்கடியில் உள்ள நேரத்தில் அந்த நாட்டுமக்களுடன் இந்தியா தோளோடு தோள் நிற்கவேண்டும் எனவும் இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மக்களின் வர்த்தகம் மற்றும் போக்குவரத்தை அதிகரிப்பதற்காக நாகப்பட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் படகுச்சேவையை ஆரம்பிக்கவுள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று ஒருவருடகாலத்தை பூர்த்தி செய்துள்ளமைக்காக தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ள இந்தியப் பிரதமர், இலங்கை மக்கள் கடந்த வருடம் பல நெருக்கடிகளை எதிர்கொண்டார்கள். ஆனால் நெருங்கிய நண்பர்கள்போல நாங்கள் நெருக்கடியான தருணத்தில் இலங்கை மக்களுடன் தோளோடுதோள் நின்றோம் எனவும் தெரிவித்துள்ளார்.

(அ-ஒ-இ)

## 13 'மைனஸ்'...

பிரதமர் நரேந்திர மோடியிடம் பிரஸ்தாபித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியப் பிரதமர் மோடியுடனான சந்திப்பின் பின்னர் இந்திய ஊடகங்களுக்குத் தெரிவித்த கருத்துகளை ஜனாதிபதி ஊடகப் பிரிவு, ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் மேம்படுத்தப்பட்ட பொருளாதார, உட்கட்டமைப்பு, தொழில்நுட்ப முன்னேற்றங்களைப் பாராட்டிய ஜனாதிபதி, இந்தியாவின் வளர்ச்சி அயல் நாடுகள் மற்றும் இந்து சமுத்திர வலய நாடுகளுக்கு சாதகமான தன்மையை ஏற்படுத்தும்.

கடந்த வருடம் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார, சமூக, அரசியல் ரீதியிலான அசாதாரண சவால்கள் மற்றும் அந்தச் சவாலைகளை வெற்றிகொள்வதற்காக என்னால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மறுசீரமைப்பு முயற்சிகள் தொடர்பிலும் பிரதமர் நரேந்திர மோடியிடம் எடுத்துரைத்திருந்தேன்.

### மோடிக்கு நன்றி

எமது அண்மைய வரலாற்றில் மிக சவாலான காலப்பகுதியில் இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கு பிரதமர் மோடிக்கும், இந்திய அரசுக்கும், இந்திய மக்களுக்கும் மனப்பூர்வமாக நன்றிகளைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம். இலங்கையின் அண்மைக்கால நிலைமைகளை மீளாய்வு செய்யும்போது, நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும் இலங்கையர்களின் அனைத்து சமூகங்களுக்கும் பலன் கிட்டும் வகையில், நீதி, நியாயத்துடனான நிலையான, ஸ்திரமான அபிவிருத்தியை நோக்கிய பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான எனது அர்ப்பணிப்புக்களை பிரதமர் மோடிக்கு எடுத்துரைத்துள்ளேன்.

இதற்கு அப்பால் சென்று இலங்கையை பெரிய பொருளாதார மறுசீரமைப்பு பாதைக்கு இட்டுச் சென்றுள்ளதையும், இந்த செயற்பாடுகளின் நிலையான பிரதிபலன்களை இலங்கை தற்போது அடைந்துள்ளதாகவும், நாட்டின் முன்னேற்றம் குறித்து உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் நம்பிக்கை மீளக் கட்டியெழுப்பப்பட்டுள்ளதையும் நான் தெளிவுபடுத்தியுள்ளேன்.

### அதிகாரப் பகிர்வு

மறுசீரமைப்பு, அதிகாரப் பகிர்வு, அதிகாரப் பரவலாக்கம், வடக்கு அபிவிருத்தித் திட்டத்தின் பலதரப்பட்ட விடயங்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்காக நான் முன்வைத்த பரந்துபட்ட யோசனை குறித்து கருத்துகளையும் அவருடன் பகிர்ந்துகொண்டேன். இந்தப் பணிகள் குறித்து இணக்கப்பாட்டுடன், தேசிய ஒற்றுமைக்காகப் பணியாற்றுமாறு நான் நாடாளுமன்றத்தின் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளேன். இந்த முயற்சிகளின்போது, பிரதமர் மோடி, தனது ஒத்துழைப்பையும், ஆதரவையும் வெளிப்படுத்தியுள்ளார்.

### விமானசேவை முக்கியமான மைல்கல்

அண்மையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட சென்னை மற்றும் யாழ்ப்பாண விமானச் சேவைகள், இரு நாடுகளுக்கும் இடையிலான விமான இணைப்பில் ஒரு முக்கியமான மைல்கல்லாகும். இரு நாடுகளுக்குமிடையில் விமான சேவைகளையும், கப்பல் சேவைகளைகளையும் மேம்படுத்த உடன்பாடு காணப்படுகிறது. அது சுற்றுலா மற்றும் கலாசார உறவுகளை வலுப்படுத்தும்.

### படகுச்சேவை

தலைமன்னார் - இராமேஸ்வரம் மற்றும் நாகபட்டினம் - காங்கேசன்துறை ஆகிய பகுதிளுக்கிடையிலான படகுச் சேவை இரு நாடுகளுக்கான கடல்வழிப் போக்குவரத்துக்கு வலு சேர்க்கும். இலங்கை மற்றும் இந்திய உறவுகளுக்கான வேறு வழிமுறைமைகள் தொடர்பில் ஆராய்வதும் பொருளாதார வளர்ச்சிக்கு மற்றுமொரு வலுவாக அமையும்.

டிஜிற்றல் தொழில்நுட்பத்தின் ஊடாக சேவை வழங்கல் மற்றும் தனிநபர்களை மையப்படுத்திய சேவைகளுக்கான இந்தியாவின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள இலங்கை ஆர்வமாக உள்ளது.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான அதிக வலுவுடனான மின் பரிமாற்றத் தொடர்புக் கட்டமைப்பு ஒன்றை நிறுவினால் இருநாடுகளுக்கும் இடையிலான இருவழிப்பாதை மின் வர்த்தகத்துக்கான வழியை ஏற்படுத்தும்.

### வலுசக்தி மையம்

இந்தியாவின் ஒத்துழைப்போடு, திருகோணமலை இலங்கையின் வலுசக்தி மையமாக அபிவிருத்தி செய்தல், தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பிலான மையமாகவும் திருகோணமலையை மேம்படுத்துவது தொடர்பிலான இலங்கையின் இலக்கு முக்கியமானதாகும். பிரதமர் மோடி மற்றும் நான் நம்பிக்கை கொண்டுள்ள வகையில், இந்தியாவின் தெற்குப் பகுதியிலிருந்து இலங்கை வரையிலான பல்துறைசார் பெற்றோலியக் குழாய்க் கட்டமைப்பொன்றை உருவாக்குவதால், இலங்கையினால் வழங்கக்கூடிய உறுதியான வலுசக்தி விநியோகத்தை உறுதிப்படுத்த முடியும் என்பதே பிரதமர் மோடியினதும் எனதும் எதிர்பார்ப்பாகும்.

எமது மக்களின் போஷாக்கு நிலைமையை மேம்படுத்துவதற்கான பால் உற்பத்தி மற்றும் கால்நடை துறைகளில் எமது ஒத்துழைப்புக்களை மேம்படுத்திக்கொள்வது தொடர்பிலும் கலந்தாலோசித்தோம். இந்திய உதவியுடன் இலங்கைக்குள் புதிய உயர்கல்வி நிறுவனங்களை நிறுவுவது முக்கியமானதென நம்புகிறோம்.

இன்று நாம் நடத்திய கலந்துரையாடல் இலங்கை - இந்தியாவின் அடுத்த 25 வருடங்களுக்கான அடித்தளத்தை இடும் என்றும், இலங்கை அனைத்துச் சமூக குழுக்களினதும் நிலையான அபிவிருத்தி மற்றும் தேசிய ஒருமைப்பாடு இலங்கையின் அனைத்து சமூகத்தினர் மத்தியிலுமான நல்லிணக்கம் மற்றும் இலங்கை மக்களுக்கு சுபீட்சமான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்குவதற்கான எனது நோக்கத்துக்கு உதவும் என நம்புகிறேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார் என ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ-ஒ-5)

## நல்லூர்ப்...

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா அடுத்த மாதம் 21ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், திருவிழா தொடர்பான ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக யாழ்.மாநகரசபையால் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

திருவிழா ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாநகரசபையின் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் இடம்பெற்றது. கலந்துரையாடலில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் வருமாறு-

ஓகஸ்ட் 20 ஆம் திகதி மதியத்திலிருந்து நல்லூர் ஆலயச் சுற்றுவீதிகளில் வழமைபோல் போக்குவரத்து முற்றாகத் தடை செய்யப்பட்டு செப்ரெம்பர் 16 ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னர் நள்ளிரவே திறந்து விடப்படும். வர்த்தக நடவடிக்கைகளுக்காகக் குறித்த நேரத்தில் வாகனங்கள் உட்செல்ல அனுமதிக்கப்படும். வழமைபோல் ஆலயச் சூழலில் வசிப்பவர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கான பாஸ் யாழ். மாநகரசபையால் வழங்கப்படும்.

ஆலய வெளி வீதியைச்சூழ ஆலய நிர்வாகத்தினரால் சிவப்பு, வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடைப் பகுதிகளினுள் மாநகரசபையின் நீர் விநியோக வாகனம் மற்றும் கழிவகற்றும் வாகனங்களைத் தவிர எக்காரணம் கொண்டும் வேறு வாகனங்கள் உட் செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது. அதேபோல சிவப்பு, வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடைப் பகுதிகளினுள் எந்தவிதமான வியாபார, விளம்பர நடவடிக்கைகளும் மேற்கொள்ள முடியாது. ட்ரோன் கமராக்களைப் பயன்படுத்தி திருவிழா நாள்களில் காணொலிப் பதிவுசெய்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. காலணிகளுடன் ஆலயச் சுற்று வீதியில் நடமாடுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆலயத்துக்கு நேர்த்திக்கடன்களை நிறைவேற்றவருகின்ற தூக்குக்காவடிகள் அனைத்தும் ஆலயத்தின் முன்பக்க பருத்தித்துறை வீதி வழியாக மட்டுமே உள்நுழைய முடியும். அவ்வாறு வருகின்ற காவடிகள் சிறீ முருகன் தண்ணீர்ப் பந்தலின் முன் இறக்கப்பட்டதும், தூக்குக்காவடி வாகனங்கள் அனைத்தும், செட்டித்தெரு வீதி வழியாக வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் வழமைபோல் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ். மாநகர சபைக்கு முன்பாக உள்ள நல்லூர் குறுக்கு வீதியால் பயணித்து நாவலர் வீதியூடாக ஆனைப்பந்திச் சந்தியை அடைந்து யாழ். நகரை அடைய முடியும். யாழ். நகரில் இருந்து திரும்பும் வாகனங்கள் அதே பாதையூடாக பருத்தித்துறை வீதியை அடையும். ஆனால், இறுதி விசேட திருவிழாக்களின் போது வழமைபோல் கச்சேரி - நல்லூர் வீதியூடாக நாவலர் வீதியை அடைந்து பயணிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ஒ-இ)

## இந்திய...

தண்டனையை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்று விதித்துள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மீனவர்கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்களுக்கு ஒத்தி வைத்த சிறைத்தண்டனையை விதித்து நீதிவான் கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

இதேவேளை - மீனவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட படகுக்கான உரிமைக் கோரிக்கை வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 4ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

(அ-ஒ-125)

## யாழில்...

காரணமாக மக்களுக்கு இரு நாள்களுக்கு ஒரு தடவையே நீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் பிராந்திய முகாமையாளர் பொறியியலாளர் ஏ.ஜெகதீசன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வறட்சிகாரணமாகமக்களின்நீர்ப்பாவனை வீதமும் அதிகரித்துள்ளது. இதனால் நீர் விநியோகத்துக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மழையால் உருவாக்கப்படும் நிலத்தடி நீர்நிலைகளை நம்பியே நீர் விநியோகத்திட்டம் உள்ளது. நீர்நிலைகள் அற்றுப்போகுமானால் குடிதண்ணீர் விநியோகத்தில் தடங்கல் ஏற்படும். எனவே பாவனையாளர்கள் நீரை வீண்விரயம் செய்யாது மிகவும் சிக்கனமாகக் குடிப்பதற்கும், சமையல் தேவைக்கும் பயன்படுத்தவும்.

பருத்தித்துறை, கரவெட்டி, வல்வெட்டித்துறை ஆகிய பிரதேசங்களுக்குத் தற்காலிகமாக இரு நாள்களுக்கு ஒரு தடவை நீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் - என்றுள்ளது.

(அ-ஒ-5)

## கறுப்பு...

மணிக்கு யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரர் ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நினைவேந்தலுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

(அ-ஒ-66)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் கல்லு அரிவு யாட் ஒன்றுக்கு வேலைஆள் தேவை.
*மெசின் கல்லு அடிக்கும் அனுபவம் உள்ளவர்.
*உழவு இயந்திரம் (ரக்ரர்) ரைவர்.
*ரக்ரரில் கட்டடப்பொருள் ஏற்றி இறக்குபவர்.

**T.P:077 9400 963**

## தேவை

நல்லூரில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு கணினி அறிவுடைய நிர்வாக இயக்குனர்கள் (பெண்கள்) தேவை

**தொடர்புகளுக்கு:**

**077 4269 166, 021 222 3080**

## விற்பனைக்குண்டு

உணவகங்கள். மண்டபங்கள் போன்ற வற்றில் பயன்படுத்தக் கூடிய இந்தியாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட மிகவும் தரம்வாய்ந்த றொட்டி மா குழைக்கும் மெசின் புதிதாக எம்மிடம் குறைந்த விலையில் உண்டு. தேவையுடையோர் தொடர்பு கொள்ளவும்.

**T.P:077 6491 027**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் வசாவிளான் குட்டியபுலம் பாடசாலை அருகாமையில் **45 பரப்புக் காணி** விற்பனைக்குண்டு.

***நிலப்பரப்பு**
*குடியிருப்புக்கள் சூழவுள்ளபகுதி
*செம்மண், நன்னீரூற்று
*2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
*பலாலி வீதியிலிருந்து 1 km தூரம்
*ஒரு பரப்பின் விலை ஆறு லட்சத்து ஐம்பதாயிரம் (650,000/=)
*நிலாவரை கிணற்றிலிருந்து 2 km தூரம்

**தொடர்பு:**

**076 057 0354**
**076 826 0354**

(CS 25596)A-1

## மணமகள் தேவை

01. உடுப்பிட்டி - அச்சுவேலி, இந்து கௌரவகுலம் (V), 1987 திருவாதிரை Bachelors of electrical engineering, Canada citizen மணமகனுக்கு மணமகள் தேவை - பதிவெண் 30437
02. ஊர்காவற்றுறை - கைதடி, இந்து கௌரவகுலம் (V), 1981 பூரம் PHD California university,USA citizen மணமகனுக்கு மணமகள் தேவை - பதிவெண் - 28664
03. உரும்பிராய் - இந்து கௌரவகுலம் (V), 1970 புனர்பூசம். PGD in strategic business information,UK citizen மணமகனுக்கு மணமகள் தேவை - பதிவெண் - 28657
04. சண்டிலிப்பாய் - இந்து கௌரவகுலம் (V), 1981 பூராடம். MSC-Software engineering மணமகனுக்கு மணமகள் தேவை - பதிவெண் - 28623
05. மானிப்பாய் - கொக்குவில், இந்து கௌரவகுலம் (V), 1984 சுவாதி. .CIMA,IT Engineer,MBA,Buiness analyst,Australian citizen மணமகனுக்கு மணமகள் தேவை - பதிவெண் - 28615
06. திருநெல்வேலி - மானிப்பாய், றோமன் கத்தோலிக்கம் கௌரவகுலம் (V), 1986 Phd(uk),Uk citizen மணமகனுக்கு மணமகள் தேவை - பதிவெண் - 28686
07. நயினாதீவு - இந்து, விஸ்வகுலம், 1982 அத்தம், HND in Bio Medical Science ,UK citizen மணமகனுக்கு மணமகள் தேவை - பதிவெண் - 28740
08. அளவெட்டி, இந்து, கௌரவகுலம் (V), 1990 அத்தம், Dip in AIRCRAFT Officer(University of Malaysia),Malaysia citizen மணமகனுக்கு மணமகள் தேவை - பதிவெண் - 28166
09. அளவெட்டி - சங்கானை, இந்து, கௌரவகுலம் (V), 1984, திருவோணம், BSC (Hons) Computer Network Management(UK),Electrical Engineer UK citizen மணமகனுக்கு மணமகள் தேவை - பதிவெண் - 28933

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Phone - 077 539 3728 Whatsapp - 077 803 8193

# மரண அறிவித்தல்

## கந்தையா சரவணமுத்து



1 ஆம் கட்டை வீதி, கிராம்புவில், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சரவணமுத்து கடந்த (19.07.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், வல்லிபுரம் நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவபாக்கியம் அவர்களின் பாசமிகு கணவரும், ஜெயதாசன் (திருமுருகன் விவசாய களஞ்சியம்), குணதாசன் (UK), யோகதாசன் (UK), சந்திராதேவி (UK), குகதாசன் (UK), அனுசாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், வனஜா, செல்வமணி (UK), மாலினி (UK), காலஞ்சென்ற சிவபாலன் மற்றும் நிர்மலா (UK), தவக்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரகலாதன், பிரியங்கா, பிருந்தாபன், செல்வதேஸ் (UK), பிரதீபன் (UK),சௌமியா (UK), சர்வின் (UK), சுகிர்தன் (UK), அனித்தன் (UK), கரிணி (UK), மயூரன், மயூரா (France), கம்சிகா (France) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் செல்லம்மா மற்றும் நல்லம்மா, ராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பகவதி, ஐயாத்துரை, பரமசாமி, சின்னத்தம்பி மற்றும் சிவகாமி, சரசம்மா, தங்கமணி, காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் யோகேஸ்வரி, சந்திரமதி, ரேவதி உதயகுமாரன் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற கந்தசாமி, முருகேசு மற்றும் சுந்தரராஜா, மகேந்திரம், தவக்குமார், இராஜேந்திரன் செல்வராணி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.07.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தோற்றம்** 15.04.1932

**மறைவு** 19.07.2023

கிராம்புவில், சாவகச்சேரி.

**தகவல்:** குடும்பத்தினர்
077 930 4617, 077 039 9088



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org